


டிசம்பர் 1991 முதல் மே 1996 வரை என்றால், கிட்டத்தட்ட நாலரை வருடங்கள். அல் காயிதாவுக்கென்று ஒரு பலமான, மிகப் பலமான நெட் ஒர்க் உலகம் முழுக்க உருவானது இந்தக் காலகட்டத்தில்தான். ஒசாமா பின்லேடன் ஆப்கனிஸ்தானில் இருந்தபோதோ, பாகிஸ்தானில் வாழ்ந்தபோதோ நடைபெறாத இந்தக் காரியம், மேற்சொன்ன நாலரை ஆண்டு கால இடை வெளியில், அவர் சூடானில் இருந்தபோது சாத்தியமாகிவிட்டது.

என்ன நினைத்தாரோ அது. எப்படி நடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாரோ, அப்படியே. எங்கெங்கெல்லாம் தாம் பரவவேண்டும் என்று விரும்பினார்களோ அங்கெல்லாம். பின்னால் என்னென்னவெல்லாம் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டு லிஸ்ட் போட்டு வைத்தார்களோ, அதையெல்லாம் நிறைவேற்றிக்கொள்வதற்கான அடிப்படை நிதி, ஆயுத ஆதாரங்களை அல் காயிதா சேகரித்துக்கொண்டதும் இந்தச் சூடான் வருடங்களில்தான். நம்மால் எல்லாம் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அரசியல் சூழ்நிலை அது. ஒரு தேசத்தின் ராணுவத்துக்குப் பயிற்சி கொடுப்பதற்காக, ஒரு தீவிரவாத இயக்கத்தை வரவழைப்பார்களா? சூடான் செய்யும். அந்த இயக்கம் கேட்கும் எந்தவொரு அதி நவீன ஆயுதத்தையும் அரசாங்கமே முன் நின்று பேரம் பேசி வாங்கித் தருமா? சூடான் தரும். அல் காயிதாவின் சர்வதேச நெட் ஒர்க் சரியாக அமைவதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மாபெரும் தீவிரவாத இயக்கங்களின் மாநாட்டை, அரசு தன் செலவில் நடத்திக் கொடுக்குமா? சூடான் நடத்தும்.

கல்வி அறிவு, பொருளாதார பலம், வேலை வாய்ப்புகள், தொழில்நுட்பப் பரிச்சயம் என்று எந்தெந்த ஜிகிரி வஸ்துக்களெல்லாம் வளர்ச்சிக்குத் தேவையோ, அவை எதுவுமே சூடானுக்குள் எட்டிப்பார்க்கவில்லை. அவர்களிடம் இருந்தது ஒரு கலாசார பலம் மட்டுமே. அது சூடானின் மிகப் பாரம்பரியமான விருந்தோம்பல் கலாசாரம். நம்மால் எல்லாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத பேரன்பு அது. நண்பனோ, எதிரியோ. நல்லவனோ, கெட்டவனோ. தங்கள் தேசத்துக்கு வந்துவிட்ட ஒருத்தன் என்ன கேட்டாலும் செய்து கொடுத்தாக வேண்டும் என்பது சூடானில் அதிபர் முதல் அதிபர் வீட்டு வாட்ச்மேன் வரை காலம் காலமாகக் கடைப்பிடித்துவரும் ஒரு பழக்கம்.

இதை வெறும் வார்த்தைகளில் விவரிக்கவே முடியாது. எத்தனை ஏழையாக இருந்தாலும், ஒரு சூடானியர் வீட்டுக்கு யாராவது விருந்தாளி வந்துவிட்டால், தலையை அடகு வைத்தாவது அவர் விரும்புவதையெல்லாம் செய்துகொடுப்பார்கள். சூடானில் விருந்தாளி என்பவர், கடவுளுக்குச் சமானம்.

அல் காயிதா தன்னுடைய தளத்தை சூடானில் நிறுவ முடிவு செய்ததற்கு, அதிபரின் அழைப்பு மட்டும் காரணமல்ல. சூடானியர்களின் இந்தக் குணமும் மிக முக்கியக் காரணம். ஒருவேளை தான் சூடானுக்கு இடம் பெயர்ந்த விஷயம் அமெரிக்காவுக்குத் தெரிந்து, அங்கும் வந்து ஏதாவது வாலாட்டுமானால், தன் சார்பில் சூடான் அரசே அமெரிக்காவுடன் மல்லுக்கு நிற்கும் என்று கணக்குப் போட்டுத்தான் ஒசாமா சூடான் புறப்பட்டு வந்தார்.

ஆனால், அடிப்படையில் ஒசாமா ஒரு சுயநலவாதி இல்லை என்கிறபடியால், தமக்கு அடைக்கலம் கொடுக்கும் தேசத்துக்குத் தன்னால் என்ன செய்யமுடியும் என்று யோசித்து, ஒரு திட்டமுடன் தான் வந்திருந்தார்.

அசன் அல் துராபி கேட்டபடி சூடான் ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி. அது செய்துவிடலாம்; பிரச்னையில்லை. வேறென்ன செய்யலாம்?

முதலாவது, சூடானில் எந்த ஒரு இடத்திலும் சரியான சாலைகள் கிடையாது. எங்கு பார்த்தாலும் மணல் மூடிய மேடுகள்தான். நிறைமாத கர்ப்பிணி போலத்தான் வண்டிகள் தள்ளாடிச் செல்லும். தேசம் முழுக்க சாலை போடுவதென்றால் அதற்கு ஆகும் செலவுக்கு சூடான் தயாரில்லை. மக்களுக்கு இரண்டு வேளை சாப்பாட்டுக்கு உத்தரவாதம் கொடுக்கவே ததிங்கிணத்தோம் போட்டுக்கொண்டிருந்த அரசு அது. குடிநீர் வசதி கிடையாது. பெரும்பாலான கிராமப்புறங்களில் மின்சாரம் என்கிற வஸ்துவை மக்கள் பார்த்தது கூடக் கிடையாது. எங்காவது கூலி வேலை கிடைக்கிறது என்று தெரிந்தால் கூட்டம் கூட்டமாக ஓடுவார்கள். கிடைக்கிற சொற்பக் கூலியை வைத்துக்கொண்டு சில தினங்கள் ஓட்டுவார்கள். அடுத்த வேலைக்கான நிச்சயமில்லாமல் காத்திருப்பார்கள். காத்திருக்கும் காலங்களுக்குத் தண்ணீரும் சோளமும் தான் உணவு. தண்ணீருக்கும் பல மைல்கள் நடக்கவேண்டும்.

ஏழைமையின் பரிபூரண அரவணைப்பில் இருக்கிற ஒரு தேசத்தை, சொற்களைக்கொண்டு வரைந்துகாட்டமுடியாது. அது நிரந்தர சோகம். செய்யக்கூடியது ஏதுமில்லை.

ஆனால் தன்னாலான முதல் செங்கற்களையாவது எடுத்து வைக்கலாம் என்ற முடிவுடன் வந்திருந்த ஒசாமா, ஒரு பக்கம் ராணுவத்தினருக்குப் பயிற்சிகள் ஆரம்பித்த கையோடு மறுபுறம் சூடானின் முக்கியப் பகுதிகளில் சாலைகள் போட்டுத்தரவும் தொடங்கினார். சூடானின் தலைநகரான கார்ட்டொம் (Khartoum) நகரிலிருந்து சூடான் துறைமுகம் வரையிலான ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் நீளமுள்ள மாபெரும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் ஒன்றைத் தன் சொந்தப் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, வழுவழுவென்று வெண்ணெய் மாதிரி வழுக்கிக்கொண்டு போகும் தார்ச்சாலையை அமைத்துக்கொடுத்தார்.

இது யாருமே எதிர்பாராதது. துராபி கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது. "நீங்கள் இப்படியொரு உதவி செய்வதற்கு நாங்கள் அருகதையானவர்களே இல்லை. நாங்கள் உங்களுக்கு என்ன செய்துவிட்டோம்?" என்று ஒசாமாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டார் அதிபர் துராபி.

ஒசாமா புன்னகை செய்தார். சந்தர்ப்பத்தை மேலும் வண்ணமயமாக்கும் விதமாக, இன்னொரு ப்ளூ ப்ரிண்ட் ஒன்றை எடுத்து நீட்டினார்.

அது சூடானில் அவர் தொடங்கவிருந்த சில தொழிற்சாலைகளுக்கான வரைபடம். முழுக்க முழுக்க சூடானியர்களே வேலை பார்க்கப் போகிற தொழிற்சாலைகள். குறைந்தது சில ஆயிரம் பேர்களாவது பசியின்றி வாழ்வதற்கு ஒரு வழி.

ஆவென்று வாய்பிளந்துவிட்டது சூடான் அரசு. அதுநாள் வரை அரசு சார்பில் உருப்படியாக ஒரு வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கூட அவர்களால் அங்கே செயல்படுத்த முடிந்ததில்லை. ஏதோ செய்தார்கள். எப்படியோ சமாளித்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். உண்மையில் சூடானின் மக்கள் தொகைக்கும் அந்தத் தேசத்தின் நிதி ஆதாரத்துக்கும் ஏணி அல்ல; ஹெலிகாப்டர் வைத்தாலும் எட்டாது.

இத்தனைக்கும் சூடானின் மண் அத்தனையொன்றும் மோசமானதல்ல. வெட்டிப்போட்டால் தங்கம்

கிடைக்கிற பூமிதான். ஆனால் தொழில்நுட்ப வாசனை இல்லாத காரணத்தால், தங்கத்தை வெட்டி எடுத்துப் பிரித்து உருக்கிக் காசாக்கத் தெரியாமல் இருந்தார்கள்.

ஒசாமா அதற்கும் ஒரு திட்டத்தை முன்வைத்தார். சூடானில் தங்கம் கிடைக்கும் இடங்களில் அல் காயிதாவின் சார்பில் சுரங்கங்கள் தோண்டப்படும். தங்கத்தை எடுத்து, பிரித்து, சர்வ தேசக் கள்ள மார்க்கெட்டில் விற்று, பணத்தை அப்படியே அரசுக்குத் தந்துவிடுவார்கள்.

"உங்களுக்கு?" என்றார் துராபி. "ஒரு பைசா பங்கு கூட வேண்டாம்."

"இல்லை. நாங்கள் உங்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். என்ன வேண்டும் என்று தயவுசெய்து சொல்லுங்கள். எங்களைக் கடன்பட்டவர்களாகவே இருந்துவிடச் செய்துவிடாதீர்கள்!" என்று மன்றாடினார் துராபி.

ஒசாமா கேட்ட முதல் உதவி, கொஞ்சம் நிலம். கார்ட்டொம் நகருக்கு வெளியே அல் காயிதாவின் பயிற்சி முகாம்களை நிறுவவும், தொந்தரவில்லாமல் பயிற்சிகள் நடக்கவும் அமைதியான, ஒதுக்குப் புறமாகக் கொஞ்சம் நிலம். அவ்வளவுதானே என்று ஒரு கிராமத்தையே கொடுத்தார் துராபி.

கட்டுமான எக்ஸ்பர்ட்டான ஒசாமா, அந்த இடத்தை மிகச் சரியாக அளவெடுத்து, வேண்டிய கட்டடங்கள், மைதானங்கள், கிணறுகள், தடுப்புச் சுவர்கள், செயற்கை மலைப்பகுதிகள் என்று தங்கள் பயிற்சிக்குத் தேவையான விதத்தில் வடிவமைத்துக்கொண்டார். மறக்காமல், நிலம் கொடுத்த தற்கு நன்றி தெரிவித்து அதிபருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

துராபி தன் வாழ்நாளிலேயே இப்படியொரு சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டதில்லை என்பதாக நினைத்தார். எங்கோ ஆப்கனிலிருந்து ஒரு மனிதன் புறப்பட்டு வருகிறான். பல்லாயிரக் கணக்கான கிலோ மீட்டர்களுக்குச் சாலை போட்டுக் கொடுக்கிறான். ஏராளமான தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறான். ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி தருகிறான். செய்தவேலைக்குச் சம்பளம் என்று ஒரு பைசா கேட்பதில்லை! கேவலம், இருக்க இடம் மட்டுமே நாம் தந்திருக்கிறோம். அதுவே போதுமா? போதும் என்கிறானே? என்ன இது, என்ன இது என்று சந்தோஷத்தில் அவருக்குப் பேச்சே வரவில்லை.

இப்படி மேலும் மேலும் நெகிழவைத்து ஒரு வழிபண்ணிய பிறகுதான் ஒசாமா மெல்ல ஆரம்பித்தார்.

"நாங்கள் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக யுத்தம் தொடங்கியிருக்கிறோம்."

"அப்படியா? மிகவும் நல்லது. நான் என்ன செய்யவேண்டும்?"

"எங்களது முதல் இலக்கு அநேகமாக அமெரிக்காவாக இருக்கும்."

"சபாஷ். உங்களைத் தவிர வேறு யாரால் இது முடியும்?"

"சவூதி அரேபியாவிலிருந்தும் உலகின் பிற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும். அதுவரை எங்கள் யுத்தம் ஓயாது."

"மிகவும் நல்ல காரியம். பூனைக்கு யாராவது மணி கட்டித்தான் ஆகவேண்டும். நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்."

அப்போதுதான் ஒசாமா சொன்னார். "மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! எங்களுக்கு ஆயுதங்கள் வேண்டும். வெடி மருந்துகள் வேண்டும். அமெரிக்காவிடம் என்னென்ன நவீன ஆயுதங்கள்

இருக்கின்றனவோ, அவையெல்லாம் அல் காயிதாவிலும் இருக்கவேண்டும். அப்போதுதான் சம பலத்துடன் நாம் யுத்தம் செய்யமுடியும்."

"சரிதான். ஏற்றுக்கொள்கிறேன். ஆயுதம் வாங்க உங்களுக்குப் பணம்.."

ஒசாமா சிரித்தார். "கஷ்டப்படும் உங்களிடம் பணம் கேட்டால் அது பாவம். பணம் எனக்குப் பிரச்னை இல்லை. அது பல்வேறு வழிகளில் வருகிறது. ஆனால் எங்களுக்கு பெரிய அளவில் ஆயுதங்கள் வாங்குவதில் சிக்கல் இருக்கிறது. வாங்குவதில் உள்ள சிக்கலைக் காட்டிலும், கொண்டு வருவதில் உள்ள சிக்கல்கள் அதிகம். புரியுமென்று நினைக்கிறேன்."

துராபி யோசித்தார்.

சூடானின் மாபெரும் மதத்தலைவரும் ஆட்சித் தலைவருமான அவருக்கு இது ஒரு பெரிய வேலையாக இருக்காது. ஆனால் சூடான் ஏன் திடீரென்று இத்தனை ஆயுதங்கள் வாங்கவேண்டும் என்கிற கேள்வி எழும். இத்தனை ஆயுதங்கள் வாங்குவதற்கு அவர்களிடம் ஏது பணம் என்கிற துணைக்கேள்வி உடனே எழும். பாகிஸ்தானிலிருந்து காலி செய்துவிட்ட அல் காயிதா இப்போது எங்கே இருக்கிறது என்று உடனடியாகத் தேட ஆரம்பித்துவிடுவார்கள். இரண்டு மணி நேர தூரத்தில் பதுங்கியிருப்பவர்களைக் கண்டுபிடிப்பது பெரிய விஷயமாக இருக்காது. ஏற்கெனவே பாகிஸ்தானில் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் சி.ஐ.ஏ.வின் ஏஜெண்டுகள் இந்நேரம் மோப்பம் பிடித்து தம் அரசுக்குச் செய்தி அனுப்பியிருப்பார்கள்.

ஆனாலும் ஒசாமாவுக்கு இந்த உதவியைச் செய்துதான் ஆகவேண்டும். அப்புறம் நட்புக்கு என்ன அர்த்தம்?

"சரி, நான் பொறுப்பு" என்றார் துராபி.